★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 1 றம்ழான் 23 இதழ் 186

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-8-79

**இறக்குமதி செய்யப்பட்ட**

ஃ பலவித பரிசுப் பொருட்கள்.
அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**கிருபா கிவ்ற் கவுஸ்**
KIRUBA GIFT HOUSE
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083

### அச்சிட்ட சித்தை துணிவிலை குறைப்பு

(கொழும்பு)

ஒருவகை பிரிண்டட் சித்தைகளின் விலைகளைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது ரூபா 7-30 சதமாக விற்கப்படும் உள்ளூர் பிரிண்டட் சித்தையை இனிமேல் 6 ரூபா 80 சதமாக விற்கும்படி வர்த்தக அமைச்சு "சலுசல"வுக்கு பணிப்புரை வழங்கியுள்ளது

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY ★ RECEIVED 1979-8-17 PERIODICALS DIVISION

## இந்திய கூட்டரசின் தலைவிதியை நிர்ணயிக்கும்

# நம்பிக்கைப் பிரேரணையை

# லோக சபையிடம் சரண்சிங் சமர்ப்பித்தார்

## வரலாற்றில் முதல்தடவை அரசு ஒன்றுக்கு நிர்ப்பந்தம்

புதுடில்லி, ஆக 16

இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங், தமது அரசு மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணைக்கான முன்னறிவித்தலை லோகசபை சபாநாயகரிடம் இன்று சமர்ப்பித்தார்,

**இந்தியவரலாற்றில் அரசு ஒன்றுக்கு இவ்வாறான நம்பிக்கைப் பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும்**

திரு. சரண்சிங்கின் இந்த நம்பிக்கைப் பிரேரணையைச் சபாநாயகர் திரு ஹெக்டே ஏற்றுக்கொண்டார்.

இப்போதைய மந்திரிசபை மீது லோகசபை நம்பிக்கை தெரிவிக்கிறது என்ற திரு சரண்சிங்கின் ஒற்றைவரிப் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றக் கூட்டத்தொடர் இம்மாதம் 20ந் திகதி ஆரம்பமாகும்போது விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்திய அரசின் தலைவிதியை நிர்ணயிக்கும்

ஜனதா-எஸ்-காங்கிரஸ் கூட்டரசாங்கத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இப்பிரேரணை தோல்வியடையாது. அவ்வாறு தோல்வியடையும் பட்சத்தில் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யத் தாம் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கப்போவதில்லை என திரு சரண்சிங் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

இதேவேளையில் நம்பிக்கைப் பிரேரணை விவாதத்தில் திரு சரண்சிங்கின் அரசு தோல்வியுற்று ஜனதா கட்சியே மீண்டும் உறுதியான அரசொன்றை அமைக்குமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜெகஜீவன் ராம் கூறியுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் அடுத்த ஆண்டிலாவது இடைத்தேர்தல் நடைபெறுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் (இ)

**யாழ். விவசாய குழு கூட்டம்**

## மானிப்பாய் எம். பி. கலந்துகொண்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் மானிப்பாய் எம். பி திரு வி தருமலிங்கம் மட்டும் கலந்துகொண்டார்.

இக்கூட்டம் யாழ் அரசாங்கச் செயலகத்தில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ பி விஜயக்கோன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாய அபிவிருத்தி பற்றி ஆராயப்பட்டது யாழ் மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மற்றும் விவசாயப் பகுதி உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைமை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ஈ)

# நாவலர் பெருமானுக்கு யாழ். நகரில் பெருவிழா

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஏற்பாடு; நாளை கருத்தரங்கு நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நாவலர் பெருமானின் நூற்றாண்டு நிறைவு விழாவையும், மணி மண்டபம் எடுத்த 10 வது ஆண்டு நிறைவையும் பெருவிழாவாக யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை தீர்மானித்துள்ளது

இவ்விழா பற்றிய கருத்தரங்கொன்று நாளைக் காலை கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா தலைமையில் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கருத்தரங்கில் முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம், யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு நா. சுப்பிரமணியசர்மா, ஆசிரியை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

நூற்றாண்டு விழாவின் தொடக்கவிழா கடந்த மாதம் 28 ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. வீ சிவசுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இதைத் தொடர்ந்து

[6 ம் பக்கம் பார்க்க]

**மங்கள மாங்கலிய தாரணம்**

மணமகன்: ஏகபுத்திரன் செல்வன்
ஐ சத்தியபாலன்
(ஆளுநர் "மாவீர கராஜ்" உரும்பராய்)

மணமகள்: திருவளர் செல்வி
சகுந்தலாதேவி சுந்தரமூர்த்தி

காலம்: 79-8-20 திங்கட்கிழமை காலை 9-55 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்தம்.

இடம்: மணமகள் இல்லம் "யாமா வளவு தெல்லிப்பளை"

வரவேற்புபசாரம்: 79-08-22 புதன்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை (மணமகள் இல்லம்)

அன்பர்கள், உறவினர்கள் சோதரர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்)

தி. சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர்) "யாமா" வளவு தெல்லிப்பளை

செ. ஐயாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) "சிவபவனம்" உரும்பராய்

3307

# என்எம்மின்பூதவுடல்இன்று பாராளுமன்றம் செல்லும்

## கட்சிக்காரியாலயத்தில் ஏராளமானோர் கண்ணீர் ததும்ப அஞ்சலி!

(கொழும்பு)

முதுபெரும் இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற கலாநிதி என் எம் பெரேராவின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்று லங்கா சமசமாஜக் கட்சிக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்தபோது பெருந்தொகையான மக்கள் கண்ணீர் ததும்ப அஞ்சலிசெலுத்தினர்.

மறைந்த தலைவரின் பூதவுடல், மக்களின் அஞ்சலிக்காக இன்று பிற்பகல் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். யூனியன் பிளேசிலுள்ள கட்சிக்காரியாலயத்திலிருந்து பிற்பகல் 1-30 மணிக்கு ஊர்வலம் புறப்படும் பிற்பகல் 3-00 மணி முதல் அங்கு மக்களின் அஞ்சலிக்காக திங்கட்கிழமை பிற்பகல் வரை வைக்கப்பட்டிருக்கும்

இறுதிச் சடங்குகள் சுதந்திர சதுக்கத்திலுள்ள விளையாட்டமைச்சு மைதானத்தில் நடைபெறும் நாட்டின் தலைவரென்ற வகையில் ஜனாதிபதி

[6-ம் பக்கம் பார்க்க]

## சங்குப்பிட்டியில் கைதான 6 பேருக்கும் பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டியில் வைத்துச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு பேரையும் நேற்றுமுன்தினம் தலா 750 ரூபாய் உறுதிப் பிணையில் செல்வதற்கு யாழ் நீதிவான் திரு எஸ் இராசலிங்கம் அனுமதியளித்தார்.

தவாலியிலும் நல்லூரிலும் சமீபத்தில் நடந்த குற்றச்சம்பவங்கள் தொடர்பாகச் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நா அரியரத்தினம், பொ நவரத்தினம், க தியாகராசா, சுகிர்தரர்சா, செ ஐயாத்துரை, அரிச்சந்திரன் ஆகிய ஆறு சந்தேகநபர்களும் அடுத்தமாதம் 29ந் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென்று நீதிவான் உத்தரவிட்டார்.

## மேலதிக வருமானமாக ஒருலட்சத்து மூவாயிரம் ரூபா!

(நெல்லியடி)

வடபிராந்திய மத்திய போக்குவரத்துச்சபை தனது காலாண்டு மேலதிக வருமானமாக ஒரு லட்சத்து மூவாயிரம் ரூபாவை பெற்றுள்ளது.

கிளிநொச்சி, மன்னார், கேண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய ஐந்து இ போ ச டிப்போக்கள் மூலமே இம் மேலதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

குறைந்தளவு பஸ் வண்டிகள் இருந்தபோதும் ஓரளவு சிறப்பான பஸ்சேவைமூலம் இவ்வருமானம் ஈட்டப்பட்டது பாராட்டிற்குரியது என்று பிராந்திய இ போ ச அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த அரசு சுவீகரித்த

## காணிகளுக்கு இதுவரை பணம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி குடியேற்றத் திட்டத்திற்கு காணி வழங்கிய சிலருக்கு இன்னும் அதற்குரிய பணம் வழங்கப்படவில்லை.

கடந்த அரசு காலத்தில் இக்காணிகள் பரப்பு 400 ரூபா முதல் 700 ரூபாவரை சுவீகரிக்கப்பட்டது.

தற்போது இக்காணியின் பெறுமதி பரப்பு, 8000 ரூபாவாக அதிகரித்துள்ளதால், இதே பெறுமதியை வழங்கவேண்டுமென காணியின் பூர்வீக உரிமையாளர்களில் சிலர் அரசிடம் கோரியுள்ளனர்.

பணம் வழங்காத பட்சத்தில் தங்களுக்கு தங்கள் காணியை வழங்குமாறும் நாங்கள் அதனை விற்றுப் பணம் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனராம்.

இவர்கள் குடியேற்றத்திட்டத்திற்காக 15 முதல் 20 பரப்பு வரை அரசுக்கு வழங்கியிருந்தனர்.

முன்னர் நல்லூர் கிராம சபையினர் குப்பை தாட்டு வந்த இக்காணிகளின் பெறுமதி இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## மனைவி - மக்கள் பிரிவு தாங்காது தற்கொலை

(நெல்லியடி)

மனைவியையும், மக்களின் இருவரையும் இழந்த குடும்பத்தலைவரொருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்து கொண்டார்.

இச்சம்பவம் சலிவளவு பொலிகண்டியில் நடைபெற்றுள்ளது ம. பரமகுரு என்னும் குடும்பத்தலைவரே இவ்வாறு பரிதாபமாக தமதுயிரை போக்கிக்கொண்டவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம் வி புவனேந்திரன் நடாத்தினார். மரண விசாரணையின்பொழுது வல்வெட்டித்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தார்கள். காலஞ்சென்றவரின் மகன் திரு யோகேந்திரராசா தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது!

''காலஞ்சென்ற தந்தைக்கு மொத்தமாக 11 பிள்ளைகள் இருந்தனர் இவர்களில் இருவர் கடந்த ஒரு வருடத்தின் முன்பு தற்கொலைசெய்துகொண்டனர் எனது தாயாரும் கடந்த இரண்டாண்டின் முன்னர் தற்கொலைசெய்துகொண்டார் இம்மூவரின் மரணங்களும் காலஞ்சென்றவருக்கு மனவேதனையை ஏற்படுத்தியிருந்தன

''சம்பவதினம் நான் படகு எஞ்சினை திருத்துவதற்காக பருத்தித்துறைசென்று திரும்பி வந்தபோது வீட்டினுள் எனது தந்தை சுருக்கில் தொங்குவதைக்கண்டேன். அவர் அப்போது இறந்தநிலையில் காணப்பட்டார்''

மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் இருண்டிபால, கிராமசேவகர் யோசப் அன்ரனி, மு. கதிரவேற்பிள்ளை, தே தவராசா ஆகியோரும் சாட்சியமளித்தார்கள் இறுதியாக தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## தட்டுப்பாடு

(சுன்னாகம்)

வலி-மேற்குப்பகுதியில் பண்ணைக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இப்பகுதி விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

## மண்ணித்தலை செபஸ்தியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மண்ணித்தலை புனிதசெபஸ்தியார் திருவிழா எதிர்வரும் 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. 23ந் திகதி தொடக்கம் மூன்றுநாள் நவநாட்களும் அதைத்தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை திருநாட் பூசையும் அன்று பிற்பகல் தேர்ப்பவனியும் இடம்பெறும். சமயச் சடங்குகளை அருட்திரு மகேந்திரன் ராஜநாயகம் கவனித்துவருகின்றார். பொதுமக்கள் இத்திருவிழாவில் கலந்துகொள்வதற்காக பரவைஷ்யூர் கடலணையிலிருந்து இலவச படகுச்சேவை 25ந் திகதியும் 26ந் திகதியும் நடைபெறுமென்று தெரிகிறது.

## பரலோகமாதா தினம்

(நெல்லியடி)

கரவெட்டி மாதா தேவாலயத்தில் பரலோகமாதாதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செவ்வாய்க்கிழமை இறுதிநாள் வைபவம் திருப்பலிப் பூசையுடன் ஆரம்பமாயிற்று அருட்திரு டொமினிக் அடிகளார், ஜோசப்மேரி அடிகளார், தேவராஜன் அடிகளார் ஆகியோர் திருப்பலி பூஜையை ஒப்புக்கொடுத்தார்கள், பிற்பகல் மாதாவின் சொரூப ஊர்வலத்துடன் மாதாதினம் முடிவடைந்தது (ஆ)

## இலவச பால்மா

(நெல்லியடி)

குடத்தனைக் கிராமசபைக்குட்பட்டபிரதேசத்தில்வாழும் வருமானம் குறைந்த சிறுவர்களுக்கு லக்டோஜன் பால்மா வாராவாரம் வழங்கப்படவுள்ளது

வாரத்திற்கு ஒரு றுத்தல் பால்மா வீதம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை, மேற்படி கிராமாட்சி மன்றத்தின் விசேஷ ஆணையாளர் திரு. எம் வேலுப்பிள்ளை எடுத்து வருகின்றார். இம்மாதம் 20-ந் திகதிமுதல் பால்மா வழங்கப்படும் எனத் தெரியவருகின்றது. (ஆ)

## உரக்களஞ்சியம்

(புலோலி)

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதி விவசாயிகளின் நன்மை கருதி வல்வெட்டித்துறை கெருடாவிலில் உரக்களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது

75000 ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் இந்த உரக்களஞ்சியத்தை யாழ் மாவட்ட சமநலச்சேவைத் திணைக்களம் அமைத்துவருகிறது இக் களஞ்சிய அமைப்புவேலைகள் இவ்வருட முடிவிற்குள் பூர்த்தியாகிவிடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

ஊர்காவற்றுறைப் பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) அவர்களால் கீழ்வரும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன. இவற்றுக்குரிய கேள்விப்பத்திரங்களை 20-08-79-ந் திகதியில் இருந்து 24-08-79-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ரூபா 50/-ஐப் பிணைப்பணமாகச் செலுத்தி வேலணையிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 29-08-79-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள் யாழ்ப்பாண அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் மேலும் விபரங்கள் தேவைப்படின் ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

### வேலைகள் விபரம்

1. எழுவைதீவு இறங்குதுறை கட்டு வேலை
2. அனலைதீவு இறங்குதுறை கட்டுவேலை
3. அல்லைப்பிட்டி கிழக்கு வீதி திருத்தவேலை
4. அனலைதீவு வடக்கு அம்மன்கோவில் வீதி திருத்தவேலை

குறிப்பு: இவ் வேலைகளுக்கு ரூபா 50,000/- வரை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.

15-08-79 3316

## ''தமிழ் மொழிக்காகப் பாடுபட்டவர்''

(யாழ்ப்பாணம்)

''ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வீடும், இலவச அரிசியும் இரு பாஷைகளுக்கும் சம அந்தஸ்தும் கொடுத்து இலங்கையை அந்நியோந்நியமான சமுதாயம் நிறைந்த சுவர்க்கமாக்க கனவு கண்டவர் கலாநிதி என். எம். பெரேரா.

''டாக்டர் என். எம். பெரேரா தமிழ்மக்களுக்காக உரிய வேளைகளில் குரல் கொடுக்கத் தவறவில்லை. நீதிக்காக வாதிட்டவர் ஒரு காலத்தில் தமிழ்மொழிக்காகப் பாடுபட்டுச் இங்கள மக்களின் கல்லெறியையும் சொல்லடியையும் பெற்றவர்'' என்று கிளிநொச்சி கமத்தொழிலாளர் சங்கத்தலைவர் விசேட கட்டப் பொறியியலாளர் சங்க மண்டபத்தில் டாக்டர் கே. எஸ் இராசசுந்தரம் தலைமையில் நடந்த இரங்கற் கூட்டத்தில் ஆசிரியமணி ஆர் ரி சுப்பிரமணியம் கூறினார்;

டாக்டர் என். எம். பெரேராவின் அபாரமூளையும் ஆளும் திறனும் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தபோது காட்டிய சாணக்கியமும்என்றும் நினைவுகூரத்தக்கவை என்று தலைமையுரையில் டாக்டர் கே. எஸ் இராசசுந்தரம் கூறினார்.

இனைப்பாறிய தபாலதிபர் திருவாளர்கள் திரு ச. சரவணமுத்து உட்படப் பலர் உரையாற்றினர். (ஆ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நாவலடி அரியாலை வீதியில் கண்டி ரோட்டிலிருந்து ½ மைல் தூரத்தில் (15) பரப்பு தென்னங்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. குடியிருப்பதற்கு வசதியான இடம் பஸ் போக்குவரத்து இருக்கிறது. R. கோபாலஇரத்தினம், சட்டத்தரணி, 125, கொழும்புத்துறை வீதி. சுண்டிக்குளி. 3313

அல்சேசன் நாய்கள் விற்பனைக்கு உண்டு ஞாயிறு மட்டும் தொடர்புகொள்ளவும். நவராஜலிங்கம், 'ஈஸ்வரி வாசம்' இணுவில் வீதி, (மானிப்பாய் வைத்தியசாலைக்கு அருகாமை) மானிப்பாய. 3318

## வீதி திருத்தம்

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் போக்குவரத்து வசதிகளை சீர்செய்யுமுகமாக நாகர்கோவில் தொடக்கம் குடாரப்புவரையுள்ள வீதி அகலிக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டுவருகிறது.

இவ்வீதிச் சீர்திருத்தத்திற்கென பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்டவரவு-செலவுத்திட்டத்தின்கீழ் இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

இவ்வாறு அகலித்து திருத்தியமைக்கப்பட்டு வருவதனால் தாம் இதுவரை போக்குவரத்தில் அனுபவித்துவந்த குறைபாடு நீக்கப்படுவதுடன் பெரிதும் நன்மையடையவிருப்பதாகவும் இப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. சகு/446

தம்பு செல்லையா பளம்ரோட், ஆனைக்கோட்டை; வழக்காளி

எதிராக

1. அந்தோனிமுத்து அருளப்புவும்
2. பெண் விக்ரோறியாவும் இருவரும் சவுக்காலை ரோட், நாவாந்துறை வடக்கு, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்டகோட்டின் ஈசு/446-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1979-ம் வருஷம் புரட்டாதி மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 12000/-க்கு 1977-3-28 தொடக்கம் 1977-11-4 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 24வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 543/95.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை பராயடி நில பர. 3/8. இதில் தெற்குப்பக்கமாக அரைவாசிக்கு நிலபரப்பு பதினாறில் மூன்றும் (3/16) வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு சந்தியோ ஆரோக்கியநாதன் பெண் மோனிக்கம்மாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு சூசை மைக்பெண் தங்கம்மாவுக்குரிய ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்,
1-8-79. 3320


## பாம்பீச் ஹோட்டல்

இத்தால் சகலரும் அறியவேண்டியது பாம்பீச் ஹோட்டலில் கடமையாற்றிய திரு. இரத்தினசபாபதி மகேந்திரன் எமது ஸ்தாபனத்தின் சேவையில் இருந்து விலகிவிட்டார் என்பதை அறிவிக்கின்றோம்.

அவருடன் மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கலுக்கும் நிர்வாகம் பொறுப்பல்ல என்பதை அறிவிக்கின்றது.

நிர்வாகக்குழுவின் பொதுச்செயலாளர்.

3321

# மறைந்தும் மறையாத மாவீரர் என். எம். பெரேரா

இலங்கை மணித்திருநாட்டுக்கு உலகப் புகழினைப் பெற்றுத்தந்த மாமேதை, அரசியலிலும் பொருளாதாரத்திலும் கலாநிதிப் பட்டம் பெற்ற பெருமகன், அரசியல்வானில் இறுதிவரை சுடர்விட்டுப் பிரகாசித்த துருவநட்சத்திரம், இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் அரசியல் சித்தாந்தங்கள் வகுக்கப்படும் பயன்தரவேண்டும் என்று இறுதிமூச்சுள்ளவரை போராடியவர், ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிராக நாட்டிரும்வண்ணம் எண்ணற்ற போராட்டங்களை நடாத்தியவர், ஈற்றில் மரணதேவனுடனும் போராட்டம் நடாத்தியவாறே தமது வாழ்வை முடித்துக்கொண்டார்! நீண்ட போதே சமூ



த்திலுள்ள அரசியலுணர்வுள்ள மக்களனைவரும் கண்ணீருகுக்க கலாநிதி என். எம். பெரேரா தமது 74ஆவது வயதில் இயற்கை பெய்திவிட்டார். அவரது பூதவுடல் மறைந்தாலும், அவரது புகழ் வரலாற்றுக் காவியமாகிவிட்டது. மார்க்ஸிய, சமதர்ம நெறியை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தி, அதனை எவரும் அழிக்கமுடியாவண்ணம் வேரூன்றச்செய்த பேரறிஞர்களில் அரசியல் தலைவர்களில் தலையாயவர் அமரர் என். எம்!

## 'நாவேந்தன்'

நாட்டின் விடுதலைக்காகவும் ஏழைகள், தொழிலாளிகள், பாட்டாளிகளது விடுதலைக்காகவும் தமது வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவர். சட்டசபைக்காலத்திலிருந்து 1977ம் ஆண்டுவரை நீண்ட நெடுங்காலம் அரசபேரவையில் அவரது விமர்சனை எதிர்த்தரப்பிலும், ஆளுந்தரப்பிலுமாக மாறிமாறி ஒலித்ததனையாரும் மறந்துவிட முடியாது! ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சிறை சென்றவர். சிறையிலிருந்து தப்பி இந்தியா சென்று தலைமறைவு வாழ்க்கை நடாத்தியவர். எத்தனை எதிர்ப்புக்கள் எப்பக்கமிருந்து வரினும் இம்மியும் அஞ்சாதவர். இன்று என்றுமே வாராவழியில் கண்துஞ்சிவிட்டார்! அவரது வாழ்க்கையுடன் நாட்டின் அரசியல் வரலாறு பின்னிப் பிணைந்துகிடக்கிறது. அரசாங்க சபை, பாராளுமன்ற உறுப்பினராக, நிதிஅமைச்சராக இருந்துகொண்டு அவர் செய்த புரட்சிகள் நாட்டை மாத்திரமல்ல, உலகையே அதிசயிக்க வைத்தன! குயஸ்காலவாய்க்குத் தெற்கேயுள்ள ஒரே ஒரு பொருளாதார மேதை என்று வருணிக்கப்பட்டவர். அந்தப் புகழ் மகிமாமலே போய்விட்டார். பழகுதற்கு இனிய சுபாவம், எந்தப் பெரிய பிரச்சனையானாலும் சரளமான, நளினமான, அமெருமுக்கன்ன நகைச்சுவை கலந்த நடையில் பேசுந்திறன் என். எம்மைப் போல் யாரிடமிருக்கிறது? 1975 இடைத்தேர்தல் மேடைகளில் அவரோடு சில இடங்களில் உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடடியது. எனது தமிழ்ப் பேச்சை அப்படியே ரசித்துக் கேட்டிருந்து முதுகில் தட்டி "மிகவும் நல்ல பேச்சு" என்றுபாராட்டிய அந்தபெரும் பண்பைத்தான் யாரிடம்காண்பது? "நாலு வார்த்தைகள் நன்றாகப் பேசிவிட்டாலே மட்டந்தட்ட முனையும்" அரசியல்வாதிகளுக்கு அவர் ஒரு மகாஞானி. "தோழரே நீங்கள் எமது கட்சி அங்கத்தவரா? என்று கேட்டபோது, இல்லை, நான் ஒரு இடதுசாரி அனுதாபி' என்றபோதும் அதே மலர்ந்தமுகம். உடல் நலம் மோசமடைந்திருந்த போதும் 1979 மேதினக் கூட்டத்தில் பேசமுடியாத நிலையிலும் சிறிதுநேரம் கூட்டத்தில் கலந்துகொண்ட மனப்பக்குவம். எல்லாமே இன்று ஒரு கனவாகிவிட்டது. கலாநிதி என் எம் அமரராகிவிட்டார். ஆனால் நாடும் அதன் வரலாறும் அவரை ஒருபோதும் மறக்காது! அவர் புகழ் வாழ்க!

## மக்கள் கருத்து

### ஏன் இந்த அக்கிரமம்?

மனிதராகப் பிறந்து, மனிதரென்று சொல்லிக்கொண்டு மனிதாபிமானமற்ற முறையில் வாழுகின்றவர்கள்— வாழப்பழகிக் கொண்டவர்களால் அடுத்தவருக்கு ஏற்படுகின்ற பல தொல்லைகளும், அசௌகரியங்களும் [என்று] தான் தொலையுமோவென அங்கலாய்ப்பு கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் எவ்வளவோ உள்ளன. அதுவும் பொதுவிடங்களிலேதான் இவர்களின் உபத்திரவம் அதிகமாக இருக்கும். பஸ்தரிப்பு நிலையங்கள், புகைவண்டி, பஸ்வண்டிப் பிரயாண சமயங்கள், சினிமா மண்டபங்கள், ஆகியவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். "ஏதோ அடுத்தவருக்குத் தொல்லை கொடுக்காமல் எமது கருமத்தையும் நிறைவேற்றிக் கொள்ளுவோம்" என்று சிந்திப்பவர்கள் மிக அருமையாகி விட்டார்கள். தெருவீதிகள்கூட இவர்களின் அக்கிரமங்களுக்குப் பலியாகி வருகின்றன. அளவுக்கு அதிகமான சுயநலமும், ஆணவப் போக்கும், பண்பாடு பேணத் தெரியாத மனவியல்புமே இவற்றுக்கு உண்மையான காரணங்களாக இருக்கலாம்.

யாழ்நகரிலேயுள்ள படமாளிகையொன்றுக்குப் படம்பார்க்கப் போயிருந்தேன். முதலாவது வகுப்பு அனுமதிச்சீட்டுப் பெற்றுத் தனியாசனமொன்றில் போயிருந்தேன். காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், பின்புறத்திலே இருந்தவர் காலைத் தூக்கி எனது ஆசனத்தில் உயர வைத்துக் கொண்டிருந்தார். இடைக்கிடை காலினை உதைத்தும், அசைத்தும் உபத்திரவம் கொடுத்தார். பக்கத்தில் இருந்தவர்கள் எனது ஆசனத்திலே கையூன்றி வைத்திருக்கவும், காலினை வைத்திருக்கவும் ஆரம்பித்தார்கள். ஒரு ஆசனத்துக்காகப் பணம் கொடுத்து அனுமதிச் சீட்டை வாங்கிக்கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பக்கமாகவிருந்த ஆசனங்களுக்கும் உரிமை கொண்டாடினார்கள். புகை பிடிப்பவர்கள் கூட பக்கத்திலிருப்பவர்களது அவஸ்தையைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. பொதுவிடங்களிலே தம் தேவை நோக்கியோ அன்றிப் பொழுதுபோக்காகவோ வந்து போகின்றவர்கள், அடுத்தவரை இம்சைப்படுத்தாமல் வாழப்பழகிக்கொள்வது அவசியத்திலும் அவசியம். மனித நாகரிகத்தின் அடிப்படையான தத்துவமும் அதுவே. மிருகங்கள் போல வாழ்ந்து சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதில் என்னதான் பெருமையுண்டோ தெரியவில்லை. இனப்பெருமை பேணி, இன உரிமை பெறவேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டு இப்படியான சாதாரண விஷயங்களிற் கூடப் பண்பு தெரியாமல் நடந்துகொள்ளலாமா என்பதை ஒவ்வொருவரும்-முக்கியமாக இவ்விதம் தொல்லை கொடுப்பவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்ப்பார்களா?

"யாழ்நகரவாசி"
ஏ. என்.

## கல்வி அதிகாரி நடவடிக்கை

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டிக்கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் வாரமொன்றிற்கு 20 மணித்தியாலங்கட்கு குறைவாகக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் விபரங்களை உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் சேகரித்துவருகின்றார்.

பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களில் வாரமொன்றுக்கு 20 மணித்தியாலங்களுக்கும் குறைவாகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை வெற்றிடமுள்ள வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யும்படி கல்வி அமைச்சு அறிவித்ததைத் தொடர்ந்தே இச் சேகரிப்பு நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பக்திமார்க்கம் அருளுவாய்

தந்தைக் குபதேசம் செய்த சற்குருவேயுன்
    தகுதியைச் சற்றுமறியா
தகவிலியாயினு முன் தயவினை நாடினேன்
    தாபரித்தருளு மையா
சிந்தை விருத்தியுன் செம்மலர்ப் பாதங்கள்
    செம்மையுறவணங் குதற்கும்
சலியாதுன் புகழ்மாலை சந்ததமும் பாடியே
    சூட்டியான் மகிழ்வதற்கும்
பந்தபாசங்களெனும் கட்டுகள்விட்டுன்றன்
    பாதமலர் அடைவதற்கும்
பரகதியை நாடியே பாவவினை போக்கவும்
    பக்திமார்க்கம் அருளுவாய்
எந்தையே சண்முகத் தந்தையே நல்லைவளர்
    எழில் ஞான வேலாயுதா
எங்கு நிறை கந்தனே பொங்கியருள் பாலிக்க
ஏறிவா மயில் மீதிலே

--- உரும்பையூர் செ. ஐயாத்துரை

## வாழ்வித்தருள்வாய்!

பல்லவி

மாயோன் மருகா, தூயோன் முருகா
நாயேன் எனையும் ஆளுந்தலைவா!

அனுபல்லவி

யாருந்துணை யின்றிப் பாரின்றிதிலே
வாரும் மயில் வேலரசே யரசென்று

சரணங்கள்

வாடுமெனையே வாழ்விப்பவனே
ஆடும் மயில்வாகனனே,, வேலே
நாடும்எனைத் தென்னருகே வந்து
சூடும்படி நின்றருளினை தருபவனே!
— மாயோன்.........

கந்தா வென், மனவெந்தாள் மைந்தா
செந்தாமரைச் சேவடி யினியாய்
எந்தாய் தந்தையிலு மினியவனே
வந்தேனரசே வாழ்வித்தருள்வாய்!
— மாயோன்.........

குன்று தோறுடும் குமரா, அமரா
நின்றே யெனையாள் நிமலா, முருகா
அன்றே எனதென் னறிவும், செறிவும்
நின்றருளிணைக்கே நினைந்தேனருள்வாய்!
— மாயோன்.........

--- "நாவேந்தன்"

# "சீனத் தலைவர்களுடன் பலனுள்ள பேச்சுக்கள்"

## பிரதமர் கருத்து

(பீக்கிங்)

சீனத்தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் மிகவும் பலனுள்ளதாக உள்ளன என்று இங்கு விஜயம்செய்துள்ள இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, கருத்துவெளியிட்டுள்ளார்.

5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீனாவுக்கு விஜயம்செய்துள்ள இலங்கைப் பிரதமர், நேற்றும் நேற்றுமுன்தினமும் சீனப் பிரதமருடனும் உதவிப்பிரதமருடனும் பேச்சுக்கள் நடத்தினார்.



இதன்பின்னர் அவர் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

"சீனத் தலைவர்களுடன் நான் நடத்திய பேச்சுக்கள் மிகவும் பலனுள்ளவை. இரு நாடுகளுக்குமிடையே நிலவும் உறவை மேலும்விருத்திசெய்ய இச் சந்திப்பு பெரும் வாய்ப்பு அளித்ததுடன் சர்வதேச பிரச்னைகள் குறித்தும் இச் சந்திப்பில் பலனுள்ள முறையில் பேசப்பட்டது. அணிசேரா இயக்கம் குறித்து நீண்டநேரமாக ஆராயப்பட்டது" என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கருத்துவெளியிட்டார்.

### என். எம். மூக்கு அஞ்சலி

பிரதமர் ஆர். பிரேமதாசா, கலாநிதி என். எம். மறைவுக்கு பீக்கிங்கிலிருந்து இரங்கற்செய்தி விடுத்துள்ளார்.

"கலாநிதி என். எம். பெரேரா மறைவுகுறித்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அவர் ஆற்றல்மிக்க ஒரு அரசியல்வாதி. பாராளுமன்ற நடைமுறைகளில் அசையாத நம்பிக்கைவைத்தவர் அவர்" என்று பிரதமர் பிரேமதாசா தமது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நேற்று, சீனாவின் வெளிமாகாணங்களுக்கான தமது சுற்றுவிஜயத்தை ஆரம்பித்தார்.

## ஆண்டுவிழா

(புலோலி)

தன்னாலை வள்ளுவன் விளையாட்டுக் கழக இரண்டாவது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும், நாடக விழாவும் சோழியவத்தை வைரவர் கோவில் முன்றலில் கோப்பாய் வட்டாரக் கல்விபதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

## ★ பாலஸ்தீன அதிகாரியை சந்தித்ததன் எதிரொலி

# அன்ட்றாயங் ராஜினுமா!

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமெரிக்கத் தூதர் திரு. அன்ட்றா யங், தமது பதவியை ராஜினுமா செய்துள்ளார். இவரது ராஜினுமாவை அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

முன் அனுமதி பெறாமல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஒரு உயர் அதிகாரியை



திரு. அன்ட்றா யங் சந்தித்து உரையாடினார் என்ற குற்றச் சாட்டின்மீது அமெரிக்க காங் கிரஸின் உயர்மட்டத் தலைவர்கள் மத்தியில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதன் எதிரொலியாக, திரு. அன்ட்றா யங் ராஜினுமா செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

திரு. அன்ட்றா யங், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உயர் அதிகாரியை கடந்த மாதம் இருபத்தாரும் திகதி இரகசியமாகச் சந்தித்து உரையாடியிருந்தார்.)

திரு அன்ட்றா யங் கடந்த இரண்டரை வருடகாலமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அமெரிக்காவின் பிரதம பிரதிநிதியாக கடமையாற்றியுள்ளார்.

### இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி லேக் ஸ்தாபனத்தின் ஆரோபண விடுதிப் பொறுப்பாளரும், உருத்திரபுரம் ஜெயந்திநகர் கோணுவில் பகுதி கட்டளைக்குரவருமான வணபிதா எஸ் ஜே இராஜநாயகம் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

[உடுப்-ம]

### அனுதாபம்

[சங்கானை]

முதுபெரும் அரசியல்வாதியும், தொழிலாளவர்க்கத்தின் தந்தையுமான கலாநிதி எஸ் எம் பெரேராவின் மறைவு குறித்து வட இலங்கை கட்டுறவாளர் சங்கத்தின் சங்கானைக்கிளை தமது அஞ்சலியை செலுத்தும்முகமாக தமதுகாரியாலயத்தில் வெள்ளைக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டுள்ளது.

# நடுவானில் மோதிய விமானங்கள்!

## 154 பேர் மாண்டனர்!

(மாஸ்கோ)

சோவியத்குடியரசான உக்ரெய்னில் நிகழ்ந்த கோர விமானவிபத்தில் நூற்று ஐம்பத்து நான்கு பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு விமானங்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளாகின என்றும், விமானங்களில் பிரயாணம் செய்த 154 பேரும் மாண்டனர் என்றும் இக்கோரச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விமானவிபத்து குறித்து விசாரணை செய்வதற்காக விசேஷ கமிஷன் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகள் நன்மை கருதி அணைக்கட்டு

(புலோலி)

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள கப்புது, அந்தணன் திடல் பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நெல் வயலுக்குள் நீர் சென்று நெற்பயிர்களைச் சேதமுறச் செய்துவருவதைத் தடுக்க, இப்பகுதியில் சுமார் 85,000 ரூபா செலவில் அணைக்கட்டொன்றை யாழ் மாவட்ட சமநலச்சேவைத் திணைக்களம் அமைத்துவருகிறது.

இந்த அணைக்கட்டை அமைப்பதன் மூலம் இப்பகுதியில் சுமார் 200 ஏக்கரில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நன்மையடைவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு கே. பரமலிங்கம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் கே என் ஏ. நகீம், புலோலி கமநலச் சேவை நிலைய வெளிக்கள உத்தியோகத்தர் திரு. கே. கந்தசாமி ஆகியோர் கடந்த வாரம் இந்த அணைக்கட்டைச் சென்று பார்வையிட்டனர்

### சைவமகளிர் மன்ற போட்டி

[உடுப்பிட்டி]

அனைத்துலக சிறுவர் ஆண்டைமுன்னிட்டு யாழ் சைவ மகளிர்மன்றம் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் மனனப்போட்டி, விநோதஉடைப்போட்டி ஆகியவற்றை நடாத்த முடிவுசெய்துள்ளது.

இதனைத்தொடர்ந்து வட்டார ரீதியிலான போட்டிகள் அடுத்தமாதம் 30ந் திகதியும் இறுதிப்போட்டியான மாவட்டப்போட்டி அக்டோபர் மாதம் 13ந் திகதியும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை யாழ். சைவமகளிர் மன்றச் செயலாளர், யாழ். பிரதம கல்வி அதிகாரி ஆகியோர் கவனித்து வருகின்றனர்.



## கட்பெறீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்




சொப்பர் சைக்கிள்



ஒவ்வொரு விடையுடனும் உள்ளேயுள்ள இந்த தகரத்தகடு அனுப்பப்பட வேண்டும்.




ரீவி செற்



சுய இயக்க றைஸ் குக்கர்



தையல் மெஷின்

இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறிஸ் போண்விற்று சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம். இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

விதிகள்

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனால் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்று ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.
மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.
பரிசிழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கொ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தபடவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளபடவோ மாட்டாது.
போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினுல் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும்.
வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | ரு | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால் நான் விரும்புவது:

பெயர்: ____________

விலாசம்: ____________

திகதி ____________

இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்று போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

GARADS S 220

# விரும்பியவரை மணம் முடிக்க தந்தை தடை: இளம்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தான் விரும்பியவரைத் திருமணம் செய்ய பெற்றோர் தடைவிதித்ததால் விரக்தியடைந்த இளம்பெண் நச்சுத் திராவகம் அருந்தி உயிரைப் போக்கிக்கொண்டார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த வேலன் தவமணி (வயது 23) என்பவரே இம்முடிவைத் தேடிக்கொண்டவராவார்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தம்பிராசா நடத்திய மரணவிசாரணையின் போது இறந்தவரின் தந்தை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

தவமணிக்கு ஏற்கனவே காதலன் ஒருவர் இருந்தார். ஆனால் நாம் அக்காதலனைக் கைவிட்டு எமது விருப்பத்திற்கு ஏற்றவாறு திருமணஞ் செய்யும்படி கேட்டு சம்மதிக்கும்பட்சத்தில் ஆவணியில் திருமணத்தை நடத்த முடிவு செய்தோம். ஆனால் எமது முடிவினை ஏற்க மறுத்த தவமணி சம்பவதினம் பிற்பகல் ஒருவருக்கும் தெரியாது கிருமிநாசினி அருந்தி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார். நாம் உடனடியாக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க அங்கு அவர் மரணமானார்.

விசாரணை முடிவில் தற்கொலை மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (கோ-நி)

# திடீர்ப்பரிசோதனையில் மாட்டிக்கொண்டனர்

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியில் பல பாகங்களிலும் அனுமதியின்றிக் கூடுதலான கள் வைத்திருந்தோரும், விற்பனை செய்தோரும் கலால் பகுதியினரிடம் மாட்டிக்கொண்டனர்.

சுமார் 12 பேர் பருத்தித்துறை கலால் இலாகாவினரின் திடீர் சோதனையின்பொழுது அகப்பட்டுக்கொண்டார்கள். கலால் பகுதியினரும் கட்டைவேலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கமும் சேர்ந்து இத்திடீர் சோதனையை நடாத்தினார்கள்.

கரணவாய், நவிண்டில், சரவெட்டி, இலந்தைக்காடு, இமையாணன் ஆகிய பகுதிகளில் இத்திடீர் பரிசோதனை நடாத்தப்பட்டது. கலால் பகுதியின் பரிசோதகர் திரு. எஸ். குகேந்திரராசா தலைமையில் திடீர் பரிசோதனைக்குழு சென்றது. இப்பண்ணிருவர் மீதான குற்றப்பத்திரிகை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழங்கப்படும். (அ)

# ஆசிய சமாதானம் பற்றி இந்தோனேஷிய சபாநாயகர்

ஜகார்த்தா, ஆக. 16

"நாடுகளுக்கிடையில் தூதுகோஷ்டிகளை பரிமாறிக்கொள்வது பொருளாதார வர்த்தக அபிவிருத்திக்கு ஏதுவாகும்" என்று மாஸ்கோ சென்ற இந்தோனேஷிய பாராளுமன்ற தூதுகோஷ்டிக்கு தலைமைதாங்கிய சபாநாயகர் கரியாக்மோ தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா வர்த்தக சம்மேளனத்தின் தூதுகோஷ்டி பேச்சுவார்த்தை நடத்த சென்றிருக்கிறது. இதுபற்றி கரியாக்மோ மேலும் கூறியதாவது:-

"இந்தோனேஷியா சுயேச்சையான வெளிநாட்டுக்கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. சகல நாடுகளுடனும் நேச உறவுகளை வைத்துக்கொள்வதே எமது விருப்பம். எமது கொள்கையின் நோக்கம் உலக சமாதானத்தை நிலைநாட்டி பாதுகாப்பதாகும். ராஜ்யங்களுக்கிடையில் வெடிக்கும் தகராறுகளை பலாத்காரப் பிரயோகமின்றி சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இந்த வகையில் சீன—ஜப்பான் ஒப்பந்தம் சமாதானத்தைப் பலப்படுத்தப் போகிறதென்றால் அதை நாம் வரவேற்கிறோம். அதேபோல நாசகார அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் வியன்னா ஒப்பந்தத்தையும் இந்தோனேஷியா வரவேற்கிறது. இவ்வொப்பந்தம் உலக பந்தோபஸ்தை மேலும் பலப்படுத்துகிறது. சமாதானம் இல்லாமல் பொருளாதார அபிவிருத்தி இல்லை. பொருளாதார அபிவிருத்தியின்றி மக்கள் நல்வாழ்வை செப்பனிட முடியாது" இவ்வாறு இந்தோனேஷியபாராளுமன்றசபாநாயகர் கரியாக்மோ கருத்து வெளியிட்டுள்ளார்.

# குடி தண்ணீரின்றி மக்கள் அவதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பட்டினசபை எல்லைக்குட்பட்ட சரவணை, சுருவில், பருத்தியடைப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் குடிதண்ணீரின்றிப் பெரிதும் அவதியுறுகின்றனர். இதுவரை காலமும் குழாய் மூலம் வழங்கப்பட்ட குடிதண்ணீர் கடந்த சிலநாட்களாக வழங்கப்படாமையாலேயே இக்குடிதண்ணீருக்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. (சித். நி-கு)

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 1ம் திகதி (வெள்ளிக்கிழமை) (17-8-1979)

**மேடம்:** இதயத்தில் பூரிப்பு, இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும். கரும்புபோல் இனிக்கும், காரியங்கள் உண்டு.

**இடபம்:** ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல் விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். நாவடக்கம் நன்மை தரும்.

**மிதுனம்:** பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவின்மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்வீர்கள். ததிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

**கடகம்:** ஊதியம் வரும். உற்சாகம் பெருகும். உறவினர் வாழ்த்தும், இதயத்தில் இனிமை சேர்க்கும். புனிதம் ஒன்று செவிகளில் வந்து மோதும்.

**சிங்கம்:** சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உன் வீட்டிலேயே பூசல் தலைதூக்கும். உஷாராக இரு.

**கன்னி:** தாய்வழியால் பெருமைகள் சேரும். தனத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

**துலாம்:** இதயக்கமலம் இன்பத்தால் மகிழும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சுற்றத்தின் பயனும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** என்னதான் திறமைசாலியாக இருந்தபோதிலும் இன்று கோட்டைவிட நேரிடலாம். முகமன் பேசுபவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சும்மா இருப்பதே சுகம்.

**தனுசு:** காதலர்களுக்கு உற்சாகமான தினம். குடும்பஸ்தர்கள் வாழ்வில் இதாகலம் தென்படும். உறவினர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பெற்றோர்களின் ஆசியும் தப்பாமல் கிடைக்கும்.

**மகரம்:** தொழில்துறையில் போட்டாபோட்டிகள் தலைதூக்கும். முன்னேறுவதற்கான சந்தர்ப்பமொன்று கை நழுவிப் போகலாம். உறவாடிக் கெடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். துயர்படிந்த தினம்.

**கும்பம்:** விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர். உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரலாம். சமயோசித புத்தி தன்மையைத் தரும். நீர் கவலை இல்லாத மனிதன்.

**மீனம்:** செய்தொழில் மூலம் சிறப்புகள் கிடைக்கும். பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டாபோட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். விளையாட்டு வீரர்கள் முதலிடத்தைப் பெறுவர்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


வெல்லிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

வெலிங்டன்... போன் 7838 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

வெல்லி
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - ஜெயலலிதா
சூரியகாந்தி

ராணி (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m 3 00, & 7-30 p m
The Greatest Family Entertainment of all Times,
Bring the Young ones - They will Like it.
CECIL B. DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி
தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
எங்க பாப்பா
(புதிய பிரதி)

வின்சர் (யாழ்ப்பாணம்) போன் 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00.
சோபன்பாபு-விஜய லலிதா நடித்த
ரிவோல்வர் ரீட்டா

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
மாதர் குலத்தின் அன்பானவேண்டுகோளுக்கு
இணங்கி மீண்டும் இன்று முதல்
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம்! ஐயப்ப சரணம்!!

REGAL (Jaffna) 2nd CROWDED WEEK
Daily 10-30, a. m 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
THE OMEN
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
பார் மகளே பார்

RIO (Jaffna-TownHall) Phone: 7607 Daily 4 Shows
2ND
CAR CRASH WEEK
DRIVER
சர்க்கசில் வரும் ஜீப் - மோட்டார் சைக்கிள் ஓட்டம் "பூ...இவ்வளவு தானா?" என்று சொல்லும் அளவுக்கு திகில் ஊட்டும் கார் ஓட்டம் !!!

SHANTHI JAFFNA Phone: 764?
மகத்தான 2-வது ஜனத்திரள் வாரம்
Daily 10-30, 2-15, 4-45, 7-15, & 9-45
ஒடெஸ்ஸா பைல்
THE ODESSA FILE Scope-Color
எகிப்திய - இஸ்ரேல் யுத்தகளத்தில் இக்கதை ஆரம்பமாகிறது!
அமெரிக்க அதிபர் கென்னடி சுட்டுக்கொல்லப்பட்ட தருணமும் இதுவே!!
2ம் உலக யுத்தத்தின் பின்பு சிறையிலிருந்து தப்பி தலைமறைவான 'ரோஷ்மன்' - சர்வாதிகாரி ஹிட்லரின் ஆணவமே உருவான கொலையாளி. இவன் அமைக்கும் 'ஒடெஸ்ஸா' - பயங்கரவாத இயக்கம், யூதர் இனத்தையே நிர்மூலமாக்கத்திட்டம் வகுக்கிறது
இப்படநாயகன் - "ஜோன்வொயிட்" - ஜெர்மனிய இளம் பத்திரிகையாளன் பீற்றர் மில்லர்!
ஒடெஸ்ஸா இரகசிய மையம் பெறச்சாதனை புரியும் பீற்றர் மில்லர் வெற்றி காண்கிறானா?
ரோஷ்மனின் கதி என்ன...?

### பிரதேச சுயாட்சியை அங்கீகரிப்பதன் மூலமே

# சிறுபான்மையோர் பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என வலியுறுத்தியவர்

## என். எம். மின் மறைவு குறித்து யாழ். கம்யூனிஸ்ட் கட்சி செய்தி

(யாழ்ப்பாணம்)

முதுபெரும் அரசியல் தலைவரும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டிப் போராடிச் சிறைசென்றவரும், தாய்த் திருநாட்டின் அரசியல், பொருளாதார சுதந்திரத்திற்காகப் பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் பல போராட்டங்களை நடத்தியவருமான கலாநிதி என் எம். பெரேராவின் இழப்பையிட்டு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ் மாவட்டக் குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ் மாவட்டக்கிளை சார்பில் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. அ. வயித்திலிங்கம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய ஐக்கியத்திற்காகப் போராடியவர் தமிழ்மக்களின் பிரச்னைகளை அனுதாபத்துடன் அணுகியவர் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதேச சுயாட்சிக் கொள்கையை அனுமதிப்பதன் மூலமே சிறுபான்மையினர் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியுமென வலியுறுத்தியவர். இவரது மறைவு முழுத் தேசத்திற்கும், குறிப்பாகத் தொழிலாளி-விவசாயிகளுக்குப் பேரிழப்பாகும். (இ)

## உயர்ந்த தலைவரை நாடு இழந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர்களினதும், வறிய மக்களினதும் மேம்பாட்டுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் சேவை செய்த ஓர் உயர்ந்த தலைவரை நாடு இழந்துவிட்டது.

இவ்வாறு, உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், கலாநிதி என். எம். பெரேரா மறைவு குறித்து வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளுக்காக முக்கியமான கட்டங்களில் குரல் கொடுத்து அதன் காரணமாகத் தென்னிலங்கையில் முழுமையான ஆதரவைப் பெற முடியாத நிலைமைக்கு ஆளானவர். சந்தர்ப்பவாத அரசியலைக் கடைப்பிடித்திருந்தால் எப்போதோ நாட்டின் பிரதமராக வந்திருப்பார். இவர் நாட்டிற்கும், தொழிற்சங்க வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவைகள் தொழிலாளர் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். (செ)


### படக்காட்சிகள் இல்லை

யாழ்ப்பாணம் ராணி சினிமா, ஸ்ரீ தர் சினிமா ஆகியவற்றின் பங்காளர் திரு ஆர். பாலேந்திராவின் மறைவையொட்டி மறு அறிவித்தல் வரும்வரை இரு சினிமாக்களிலும் படக்காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

—நிர்வாகஸ்தர்கள்

3324


## "தமிழ் மக்களுக்கு பேரிழப்பு"

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களின் குறைகள் சகலத்தையும் தீர்க்கவேண்டுமென அமரர் என். எம். பெரேரா, இறுதியில் திடசங்கற்பம்செய்து செயற்பட முனையும் வேளையில் அவர் பிரிந்தது தமிழ்மக்களுக்குப் பேரிழப்பாகும்."

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கச் செயலாளர் திரு. த. இராசேந்திரன், டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"இவ்வுலகை விட்டு அவர் உயிர் பிரிந்தாலும், அவர் ஆற்றிய பொதுவுடைமைத் தத்துவமும், தொழிலாளர்களுடைய சுதந்திர உரிமையும் எம்மை விட்டு மாறாது. அவர் விட்டுச் சென்ற பொதுநலப் பணியை நிறைவேற்றுவது தான் நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்". (க-கி)

## தமிழ் அரசஊழியர்களுக்கும் பேரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு குறித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் அதன் யாழ் கிளைத் தலைவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி வருமாறு:

கலாநிதி என் எம் பெரேராவின் மறைவு இன்றைய சூழ்நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கும், மற்றும் ஏழை மக்களுக்கும் ஒரு பெரிய இழப்பாகும்.

கலாநிதி என் எம் ஓர் அரசியல் ஞானியும், தீர்க்கதரிசியும், தலை சிறந்த அரசியல்வாதியும் பட்டாளி மக்களால் தனி மதிப்பளிக்கப்படும் ஒரு முதிர்ந்த தொழிற்சங்கத் தலைவருமாவார் 1947 ம் ஆண்டு முதன்முதலாக நடத்திய அரசஊழியர்களின் பொதுவேலை நிறுத்தத்தில் முக்கிய பங்கை எடுத்தவர். அன்று தொடக்கம் இன்றுவரை டாக்டர் என் எம் பொதுமக்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும், சிறப்பாகத் தமிழ் பேசும் அரசஊழியர்களுக்கும் தியாக மனப்பான்மையுடன் செய்த சேவைகள் என்றும் மறக்க முடியாதவை. அவரின் நாமம் இலங்கையின் சரித்திரத்தில் அதி முக்கிய இடத்தை வகிக்குமென்பதில் எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. அவர் மறைந்த இந்த நேரத்தில், அவர் செய்த அரும்பெரும் சேவைகளை நினைவு கூர்ந்து எனதும், எனது சங்கத்தினதும் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## என். எம் மின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஜே ஆர் ஜயவர்த்தன, ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் ஆகியோர் இரங்கலுரையாற்றுவார்கள் (கு)

## நாவலர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தின் பல பாகங்களிலும் நாவலர் விழாவை நூறு இடங்களில் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாவலர்பற்றிய நூல்களை வெளியிடுதல் அனைத்திலங்கை ரீதியில் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி முதலியன நடாத்தி சிறப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விழாவின் இறுதிக் கட்டமாக டிசம்பர் மாதம் ஏழாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை வண்ணை நாவலர் பாடசாலை, யாழ் மத்திய கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம், வீரசிங்கம் மண்டபம் ஆகிய இடங்களில் பெருவிழாக்கள் நடைபெறவிருக்கின்றன. இவற்றில் சிறப்பம்சமாக நாவலர் நூற்கண்காட்சி, கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள். பண்ணிசை, நாடகம் என்பன நடைபெறும்.

இவ்விழாக்கள் சிறப்புற நடாத்துவதற்காக சபைப் பொதுச் செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. திரு. ஆ. சிவநேசச் செல்வன், திரு. க. சிவராஜா ஆகியோர் விழாக் குழுவின் அமைப்புச் செயலாளராகக் கடமையாற்றுவார்கள். (கா)

## இணைப்பு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச விற்பனைத் திணைக்கள ஆணையாளர் திரு ஏ பி பாலசிங்கம் நேற்று முதல் யாழ் மாவட்ட அமைச்சரின் இணைப்பு அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (செ)

### இருபாலை கொலை; கொள்ளைவழக்கு

## எண்மருக்குப் பிணை; மூவருக்கு றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு கொலை, கொள்ளை வழக்கில் எட்டு எதிரிகளும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றைய மூவரும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. இ. இராஜலிங்கம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில், இருபாலை கிழக்கில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி செல்லையா செல்லம்மா (45 வயது) என்னும் விதவைப் பெண்ணைக் கொலை செய்ததாகவும், அவருக்குச் சொந்தமான எண்பத்தி நாலாயிரத்து நூற்று எழுபத்தி ஐந்து ரூபா பெறுமதியான நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளை அடித்ததாகவும், இருபாலை கிழக்கைச் சேர்ந்த எஸ். இலங்கநாதன், எஸ். சீனியன், எஸ். இராமையா, எஸ் செல்லன், எம். சண்முகநாதன் வி. ஆறுமுகம், கே. செல்லத்துரை, எஸ். கனகாம்பிகை, வி வரதராசா. வி. மகாலிங்கம், கே. கந்தசாமி ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்களான வி. வரதராசா, வி மகாலிங்கம், கே. கந்தசாமி ஆகியோரை இம்மாதம் 24ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படியும் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட ஏனைய எட்டு சந்தேக நபர்களையும் அடுத்த மாதம் 12ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் யாழ் நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். விசுவநாதன், எம். சோமசுந்தரம் ஆகியோர் ஆஜராகினர். அரசதரப்பில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு கொகன ஆஜராகி வழக்கை நடாத்தினார். (கோ)


### மக்கினென் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

### Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு

- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

### மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


### மரண அறிவித்தல்

#### ஆர். எஸ். எஸ். மணியம்

ஆர். எஸ் எஸ், மணியம் (உரிமையாளர், மணியம் ஸ்ரோர்ஸ், 75, குமாரவீதி, கொழும்பு 11) 16-8-79ல் காலமானார். ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும், திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(38, பிலிப்பட் பிளேஸ், கொழும்பு 4)

3325

### மரண அறிவித்தல்

#### ஆறுமுகம் பொன்னம்பலம்

(பரமுவைத்தியர்)

தாவடி சித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமுவைத்தியர்) 13-8-1979ல் காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், டாக்டர் ஆறுமுகராஜா (லண்டன்), டாக்டர் இராமநாதன் (கிராமாட்சிமன்ற வைத்தியசாலை நீர்வேலி பகுதிநேர விரிவுரையாளர், லங்கா ஆயுர்வேதக் கல்லூரி), விவேகானந்தன் (கோட்டையம் மருத்துவக் கல்லூரி இந்தியா), மகேஸ்வரி, புவனேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியரட்ணம் (உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் உடுவில்), நவரத்தினராஜா (சென். பெனடிக் கல்லூரி கொட்டாஞ்சேனை), சத்தியமூர்த்தி, (அரசாங்க நிலஅளவையாளர் திருகோணமலை), சத்தியலீலா (லண்டன்), கலைவாணி (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-8-79 நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும்.

3305

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu; T Phone 389